**<u>STC.NO.14 /2021 DW-1</u>**

**நாள்** : 05.02.2026

பெயர் : முகமது அஸ்லாம்

த/பெ : முகமது தாகிர் பாஷா

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

ஒன்றாம் எதிர் மனுதாரர் நிறுவனத்தின் இயக்குநர் பதவிலிருந்து ராஜனாமா செய்வதாக இன்றுவரை நான் எங்கும் கடிதம் அளிக்கவில்லை என்றால் சரிதான். ஒன்றாம் எதிர் மனுதாரருக்கு எதிராக NCLT க்கு முன்பு நடந்த வழக்கில் எனக்கு அந்த நிறுவனத்தில் 25 சதவீதம் பங்கு உள்ளதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியும் என்றால் தெரியாது. ஒன்றாம் மனுதாரர் நிறுவனத்தில் பங்குகளை பிரித்து நடத்தியவர் யார் என்றால் இவ்வழக்கின் இரண்டாம் எதிரி ஆகும். இரண்டாம் எதிர் மனுதாரரான எனது அண்ணன் ஒன்றாம் எதிர் மனுதாரர் நிறுவனத்தில் என் பெயரையும் இணைத்து நிறுவனத்தை நடத்தி மோசடி செய்தார் என்று நான் ஏதாவது புகார் அளித்துள்ளேனா என்றால் புகார் ஏதும் அளிக்கவில்லை. அவர் மோசடி செய்தாரா என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. ஒன்றாம் எதிரி நிறுவனத்தில் நான் முழு நேர இயக்குநராக தான் பணிபுரிந்து வருகிறேன் என்றாலும் தற்போது வழக்கிற்காக அதை இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

நான் அந்த நிறுவனத்தின் இயக்குநர் தான் ஆனால் அந்த நிறுவனத்தின் தினசரி செயல்பாடுகளில் நான் பங்கேற்றது இல்லை. ஒன்றாம் எதிரி நிறுவனத்தில் நானும் இதர இயக்குநர்களும் நடத்தி வந்தோம் என்ற அடிப்படையில் நாங்கள் அனைவருமே இவ்வழக்கில் தண்டிக்க பட வேண்டியவர்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 6ஆம் எதிரி ஒன்றாம்

**எதிரியின் நிறுவனத்தின் சிஸ்டர் கன்சன் என்றதன் அடிப்படையில் அவர் இவ்வழக்கில் தண்டிக்கபட வேண்டியவர் என்றால் சரியல்ல.**

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2026.02.06 11:50:50 +0530

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.